# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 35/2024 |
| P.W. | : | 9 |
| Name | : | மருத்துவர் அம்சநித்யா |
| Husband/Father Name | : | மருத்துவர் திரு.அரவிந்த் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது ஈரோடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25-10-2023 அன்று பணியில் இருந்தபோது மாலை 3.53 மணிஅளவில் வரப்பாளையம் கா.நி.கு.எண். **168/2023** வழக்கில் 32 வயது மதிக்கத்தக்க கருப்புசாமி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை மேற்கொள்ள நிலைய காவலர் எண். 2402 ரமேஷ்குமார் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் பெற்றேன். மேற்படி

வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.5. அன்று 4.50 மணி அளவில் பிரேத பரிசோதனை ஆரம்பித்தேன். பிரேதத்தின் அங்க மச்ச அடையாளங்கள் கருப்பு நிற மச்சம் இடது கையில் காணப்பட்டது. வலது தொடையில் பழைய காயத்தழும்பு காணப்பட்டது. பிரேதமானது உடல் முழுவதும் விறைப்பு தன்மையுடன் இருந்தது. பிரேதமானது மிதமான உடல்வாகு போஷாக்குடன் இருந்தது. கண்கள் மூடியநிலையிலும், இருகாதுகளிலும், மூக்கிலும் ரத்தக்கசிவு காணப்பட்டது. இறப்புக்கு பின் ஏற்படும் நிற மாறுதல் உடலின் பின்பகுதியில் காணப்பட்டது. இரண்டு கைகளிலும் பச்சை குத்தப்பட்டிருந்தது. கை மற்றும் கால் விரல் நகங்கள் வெளிறி காணப்பட்டது. இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1. 15*8 செ.மீ * தலை தோல் அளவிலான நீல நிற கன்றிய காயம் தலையின் இடதுபுற பெரைடல், ஆக்ஸிபிடல் பகுதியில் இருந்தது. மேலும் அதை கூராய்வு செய்கையில் தலைத்தோலின் அடிப்பகுதியில் 16*8 செ.மீ அளவில் ரத்தக்கசிவு இடதுபக்க தலையில் காணப்பட்டது. மண்டை ஓட்டில் 8 செ.மீட்டரிலான எலும்பு முறிவு இடது பெரைட்டல் எலும்பிலும், 5 செ.மீட்டரிலான எலும்பு முறிவும் இடது ஆக்ஸிபிடல் எலும்பிலும் காணப்பட்டது. மூளைச்சவ்வின் மேல்பகுதியில் ரத்தம் கசிவு காணப்பட்டது. மூளை சவ்வில் இடதுபுற கீழ் பகுதியில் ரத்தம் கசிந்து காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிபகுதி சீராக காணப்பட்டது. காயம் 2. 2*1*0.5 செ.மீ அளவில் சிதைந்த காயம் இடது மேல்புற கண்ணில் காணப்பட்டது. காயம் 3. 4*5*0.5 செ.மீ நீல நிற கன்றிய காயம் வலதுமார்பின் மேல்பகுதியில் காணப்பட்டது. கழுத்து பகுதியை கூராய்வு செய்ததில் மூச்சுகுழல்சீராக இருந்தது. நாவடி எலும்பு சீராக இருந்தது. தைராய்டு சீராக இருந்தது. மார்பு பகுதியை கூராய்வு செய்ததில் மார்பறை காலியாக காணப்பட்டது.

விலா எலும்புகள் சீராக காணப்பட்டது. இருதயம் சீராக காணப்பட்டது. அதன் வெட்டுப்பகுதியில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. வால்வுகள் சீராக இருந்தது. சிறு மற்றும் பெருந்தமனிகள் சீராக காணப்பட்டது. நுரையீரல் பகுதி சீராக காணப்பட்டது. அதன் வெட்டுப்பகுதி வெளிறி காணப்பட்டது. வயிற்று பகுதியை கூராய்வு செய்ததில் வயிற்று பை அறை காலியாக காணப்பட்டது. வயிற்று பையில் 100 மிலி அளவு பழுப்பு நிற திரவம் காணப்பட்டது. அதன் வெட்டுப்பகுதி வெளிறி காணப்பட்டது. சிறுகுடல் மற்றும் பெருங்குடலில் வாய்வு காணப்பட்டது. கல்லீரல் மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சீராக காணப்பட்டது. அதன் வெட்டுப்பகுதி வெளிறி காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக காணப்பட்டது. இடுப்பு பகுதி சீராக காணப்பட்டது. ஆணுறுப்புகள் சீராக இருந்தது. முதுகு தண்டுபகுதி சி1 மற்றும் சி2 எலும்புகளில் எலும்பு முறிவு காணப்பட்டது. ரத்த மாதிரி மற்றும் உடல் உள்ளுறுப்புகள் சேகரம் செய்து ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பகுப்பாய்வு முடிவுகள் பெறப்பட்டது. அதில் எவ்வித நச்சோ, மதுவோ காணப்படவில்லை. **என்னிடம் காண்பிக்கப்படும் BIOL/805/2023 dt. 07-12-2023 அ.சா.ஆ.6. SER/CBE/11/2024 dt. 19-01-2024 அ.சா.ஆ.7. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8.** இறந்த நபர் பலதரப்பட்ட காயங்களினால் ஏற்பட்ட ரத்தக்கசிவு மற்றும் அதிர்ச்சியினால் இறந்திருக்கலாம் என்று இறுதிஅறிக்கை வழங்கினேன். **இறுதி அறிக்கை அ.சா.ஆ.9.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒரு நபர் தார் ரோட்டில் வேகமாக ஓடி வந்து அதே வேகத்தில் கீழே விழுந்தால்

நான் கூறியுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஏற்படலாம்.

**மறு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 35/2024 |
| P.W. | : 10 |
| Name | : திரு. ரமேஷ்குமார் |
| Husband/Father Name | : திரு. பத்திரன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 36 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது சத்தியமங்கலம் போக்குவரத்து காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25-10-2023 அன்று நான் வரப்பாளையம் காவல்நிலையத்தில் காவலராக பணியில் இருந்த சமயம் கா.நி.கு.எண். 168/2023 வழக்கில் இறந்துபோன கருப்புசாமி என்பவரது உடலை பிரேத பரிசோதனை மேற்கொள்ள காவல் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவ அலுவலரிடம்

ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை சமயத்தில் இறந்துபோன கருப்புசாமியின் உடலில் இருந்த ரத்தக்கறை படிந்த கருநீலம், சிவப்பு, வெள்ளை பார்டர் கட்டம்போட்ட முழுக்கை சட்டை ஒன்று, காவி நிறம், வெள்ளை பார்டர் போட்ட மூட்டாத வேட்டி ஒன்றையும் என்னிடம் ஒப்படைத்தார்கள். பிரேத பரிசோதனை முடித்து அவரது உடலை நல்லடக்கம் செய்ய அவரது தகப்பனாரிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோனவரின் உடலை எத்தனை மணிக்கு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் மதியம் சுமார் 12 மணி இருக்கும். எங்கு வைத்து பெறப்பட்டது என்றால் காவல்நிலையத்தில் வைத்து பெற்றேன். உடைகளை எத்தனை மணிக்கு காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் இரவு சுமார் 7 அல்லது 7.30 மணி இருக்கலாம்.

**மறு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 35/2024 |
| P.W. | : | 11 |
| Name | : | திரு. லோகநாதன் |
| Husband/Father Name | : | திரு. பழனிச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திங்களூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27-11-2023 அன்று நான் வரப்பாளையம் காவல்நிலையத்தில் மு.நி.காவாக பணியில் இருந்த சமயம் கா.நி.கு,எண். 168/2023 வழக்கில் இறந்துபோன கருப்புசாமியின் பிரேத பரிசோதனை சமயத்தில் மருத்துவ அலுவலரால் சேகரிக்கப்பட்ட ரத்த மாதிரிகளையும், உடுத்தியிருந்த உடுப்புகளிலிருந்து ரத்த மாதிரிகளையும் கோபி நீ.ந.எண்.2 அவர்களின் கடிதத்துடன்

பெற்று கோவை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பின்னிட்டு அ.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்களை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 35/2024 |
| P.W. | : | 12 |
| Name | : | திரு. சதீஷ் |
| Husband/Father Name | : | திரு. வேலுமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age ளர் | : | 30 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2026.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது நம்பியூர் காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25-10-2023 அன்று நான் வரப்பாளையம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது கா.நி.கு.எண். 168/2023 வழக்கில் சார்பு ஆய்வாளர் சந்திரன் அவர்கள் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை துரித தபால் மூலமாக இரவு 9.30 மணிக்கு பெற்று கோபி நீ.ந.எண்.2 அவர்களின் குடியிருப்பில் ஒப்படைத்து அதற்குண்டான அத்தாட்சி பெற்றேன். பின் காவல்துறை துணை

கண்காணிப்பாளர் கோபி அவர்களின் முகாம் அலுவலகத்தில் ஒரு நகலை ஒப்படைத்தேன். ஈரோடு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவலுவலகம் சென்று தனிப்பிரிவில் ஒரு நகலை ஒப்படைத்தேன். ஈரோடு காவல் கண்காணிப்பாளர் அவலுவலகம் முகாம் சென்று ஒரு நகலை ஒப்படைத்தேன். மாவட்ட குற்றப்பதிவேடு துறையில் ஒரு நகலை ஒப்படைத்தேன். மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் ஒரு நகலை ஒப்படைத்தேன். பின்னிட்டு நிலையம் வந்து அறிக்கை சமர்ப்பித்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்ன நேரம், தேதியில் ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 35/2024 |
| P.W. | : 13 |
| Name | : திரு. சந்திரன் |
| Husband/Father Name | : திரு. தங்கவேலு |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age ஊர் | : 58 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது ஈரோடு மாவட்ட தனிப்பிரிவு அலுவலகத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25-10-2023 அன்று நான் வரப்பாளையம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது நம்பியூர் வட்டம், எம்மாம்பூண்டி ஹரிஜன காலனியை சேர்ந்த மாரன் மகன் கொமரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று கா.நி.கு.எண். 168/2023 இதச பிரிவுகள் 302 -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10. முதல் தகவல் அறிக்கையின் அசலையும்,

வாதியின் புகாரையும் இணைத்து துரித தபால் மூலம் கோபி நீ..ந.எண்.2 அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். ஒரு நகலை புலன்விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.1 புகார் எங்கு வைத்து எழுதி கொண்டுவரப்பட்டது என்று தெரியுமா என்றால்தெரியாது. அ.சா.1 புகார் கொடுப்பதற்கு முன்பாக மேற்படி நபர் இறந்துகிடக்கிறார் என்ற விபரம் எனக்கு கிடைத்ததா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையை எத்தனை மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றால் சரியாக நினைவில்லை உடனடியாக அனுப்பிவைத்தேன். புகார் கொடுத்த நபருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சொல்ல தெரியும் எழுத தெரியாது. அ.சா-ஆ.1 புகாரானது காவல்நிலையத்தில் வைத்து எழுதப்பட்டதுஎன்றும், நான் சொன்ன நேரத்தில் சொன்னவாறு புகாரை பெறவில்லை என்றால்சரியல்ல. காலையில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை இரவு 9.30 மணிக்கு தான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின்பேரில் தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**